[25th March 1969

S.S.L.C. Examination.

*212. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce any reform in the S.S.L.C. Public Examination in particular and in the methods of school examinations in general; and

(*b*) if so, the stage at which the matter now stands?

மாண்புமிகு திரு எஸ். மாதவன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU V. ISVARMURTI : Sir, about fifty per cent of the boys and girls who appear for the S.S.L.C. Examination fail. I think the Kothari Commission also observed that this idea of external examination should be altogether done away with. May I know whether the Government think in that way, and if they do so, do they propose to do away with the Central Valuation Scheme, which has given an impetus to the evils of the external examination?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : Central Valuation Scheme காரணத்தால் தேர்வு நடத்தக் கூடாது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. திருத்துகிற முறையில் ஏற்படுகிற தவறுகளைத் தடுப்பதற்காகத் தான் சென்ட்ரல் வாலுவேஷன் ஸ்கீம் போட்டிருக்கிறோம். தேர்வு முறையில் மாற்றம் காணலாமா என்பது கேள்வி. இப்போது Technical Institution களில் தேர்வு முறையில் ஒரு தேர்வை மட்டும் அடிப் படையாக வைத்து, மாணவர்களுக்குத் தேர்வு கொடுக்காமல் ஆண்டு தோறும் அவர்களுடைய திறமையைக் கணக்கிட வேண்டும் என்ற முறை யில் அவர்கள் அமுல் நடத்துகிறார்கள். அதை நம்முடைய பல்கலைக் கழகம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்தத் திட்டமிட்டு வருகிறது. நம்முடைய ஸ்டேட் அட்வைசரி கமிட்டியில் இது பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகம் இந்தத் திட்டத்தை நடத்தும்போது, அதனுடைய அனுபவத்தை யொட்டி, நாமும் நம்முடைய உயர்நிலைப் பள்ளிகளில் தேர்வு முறையை வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு எடுத்திருக்கிறோம்.

THIRU G. KRISHNAMOORTHY : Sir, will the quarterly, half-yearly, and annual marks be entered in separate registers, and will they be taken into account for this purpose?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : Semester System என்றுதான் நம்முடைய Technical Institution-ல் வைத்திருக் கிறார்கள். அதையே பல்கலைக் கழகம் அமுல் நடத்த வேண்டுமென்றால், அது இரண்டு பகுதியா அல்லது மூன்று பகுதியா என்று அவர்கள் பரிசீலித்து முடிவு எடுத்து, அவர்கள் அனுபவத்தை ஒட்டி நாமும் முடிவெடுக்கலாம்.

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இறுதித் தேர்வை மட்டும் தேர்ச்சிக்குக் கணக்கிடுவதோடு, கால் ஆண்டு, அரை ஆண்டு தேர்வு எண்களையும் மாதந்தோறும் மாணவர்கள் பள்ளித் தேர்வு எண்களையும், பொதுவான மாணவர்களுடைய நடத்தையையும் ஒன்றாகச் சேர்த்து மாணவர்கள் பொதுத் தேர்வுக்குக் கணக்கிடுவதற்கு அரசு ஆலோசிக்குமா?

25th March 1969]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஆண்டுக்கு ஒரு முறை நடத்துகிற தேர்வை மட்டும் வைத்து மாணவர்களுடைய திறமையைக் கணக்கிட முடியாது என்பதைக் கொள்கை அளவில் அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. பொதுத் தேர்வுக்கு எப்படி மதிப்பிடுவது, நடத்தை போன்ற வற்றிற்கு எப்படி மதிப்பிடுவது என்பதையெல்லாம் கல்வி நிபுணர்கள் விருப்பத்திற்கு விட்டு, அதை ஏற்றுக் கொள்வது நல்லது என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தேர்வு பெறும் மாணவர்கள் மொத்தத் தொகை குறைவாக இருப்பதால், குறைந்த பட்சம் 60 சத விகிதம் தேர்வு அளிக்கப்படுவதற்கு அரசாங்கம் வகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தேர்வு இல்லாமலே அனுப்பலாமா என்று அங்கத்தினர் யோசனை கூறுகிறாரா என்று தெரியவில்லை. தேர்வு என்றால் திறமையையும் கவனிக்க வேண்டும். இத்தனை சத விகிதம் தேர்வு வேண்டுமென்று கவனித்தால், அது கல்வித் தரத்தைக் குறைப்பதாகும்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : இப்போது இத்தனை சதம் மாணவர்கள் வெற்றி பெற வேண்டுமென்ற நியதி இருந்துவருகிறதா ? அப்படியிருந்தால் அதை ரத்து செய்ய அரசு உத்திரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : எதிர்காலத்தில் செய்வார்களா என்று கேட்டதால், இல்லை என்று சொன்னேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : கால் ஆண்டு, அரை ஆண்டு தேர்வு மதிப்பெண்களை மட்டும் பார்க்காமல், மாணவர்கள் நன்னடத்தையைக் குறித்து, ஆசிரியர்களின் மார்க்குகளையும் வைத்து, ஏதாவது ஒரு முறை வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இப்போது பல்கலைக் கழகம் அதைப் பற்றிப் பரிசீலித்து வருகிறது. ஒரு தேர்வை மட்டும் எடுத்துக் கொள்வதா, ஆண்டுதோறும் அவர்கள் காட்டக்கூடிய திறமையையும் அடிப்படையாக வைத்து, தேர்வு முறை வைத்துக்கொள்வதா, என்ற பிரச்னை இருக்கிறது. அதில் ஒழுக்கமும் சேருமா என்று தெரியவில்லை. பல்கலைக் கழகம் ஒப்புக்கொண்டால் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : எங்கள் ஊரிலுள்ள கல்லூரியில் இருக்கிற பிள்ளைகள் ஊருக்குப் போய்விட்டார்கள். தேர்வுக்கு வரும் சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. பொதுத் தேர்வு நடக்காமல் இருந்தால், அடுத்த வருஷம் அந்த மாணவர்கள் நிலை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாவதன் : விருதுநகரில் கல்லூரியை மூடி விட்டார்கள் என்று கனம் அங்கத்தினர் கூறுகிறார்கள். அதன் விவரம் என்னிடத்தில் இல்லை.

Kadamba Tank

* 213. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any scheme to lower the level of the Kadamba Tank sluice in Tiruchendur Taluk of Tirunelveli district by 17-1/2 feet ;

(b) whether the agriculturists contend that they will be affected thereby; and